Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49 மலர் 14
போன் 389 தேசிய தினசரி இதழ் 46

யாழ்ப்பாணம் பங்குனி 14 ஸபர் 11 திங்கட்கிழமை (27-8-72)

27 MAR 1972
UNDERGRADUATE LIBRARY

இதோ! இதோ!! இதோ!!
புதுவருடத்தை முன்னிட்டு
யுனிக் றேடியோ
வாங்குபவர்களுக்கு
றேடியோ லைசென்ஸ் இலவசமாக
எடுத்துக் கொடுக்கிறோம்.
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
போன்: 7447

# "அரசைக் கவிழ்க்க எவருக்கும் இடந்தர மாட்டோம்"

## அமைச்சர் மைத்திரிபால உறுதி

5 ஆண்டுத்திட்டம்

## "பல பிரச்னைகளுக்குத் தீர்வு காணும்"

யாழ்ப்பாணம், திங். 'முந்திய அரசாங்கங்கள் பல திட்டங்களைப் போட்டிருந்தும் அத்திட்டங்கள் போதிய வர்க்கமின்மையாலும், நாட்டின் எதிர்கால சுபீட்சத்துக்கான நோக்கமின்மையாலும் வெறும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் இருந்தனவே தவிர நாட்டை அபிவிருத்தியடையச் செய்யப் பயன்படவில்லை. அந்த அரசாங்கங்கள் விட்ட தவறுகளே இன்று பிரச்னைகள் பல ரூபங்களில் தலைவிரித்து நிற்பதற்குக் காரணிகளாக உள்ளன. இத்தவறுகளை நன்குணர்ந்து நாட்டைப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கும், வளப்படுத்துவதற்கும் பல பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குமாகவே ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்துள்ளது" என்று லங்கா சமசமாஜக் கட்சியின் வடபிரதேசச் செயலாளரும், யாழ் மாநகரசபை உறுப்பினருமாகிய திரு. அ. விசுவநாதன் பாண்டியன் தாழ்வு சனசமூக நிலையத்தில் 'ஐந்தாண்டுத் திட்டமும் பொது மக்களும்' என்னும் விஷயம் பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்.

சனசமூக நிலையத் தலைவர் திரு. இ. செ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விசுவநாதன் மேலும் பேசுகையில், 'பல நாட்டுத் திட்டங்களின் அனுபவங்களைப் படிப்பினையாகக் கொண்டே நாட்டைத் தன்னிறைவாக்கவும் உற்பத்திப்பெருக்கை அதிகரிக்கவும் விவசாயம், தொழில்துறை கூட்டுறவு எல்லாவற்றை மேம்பாடடையச் செய்யவும் அரசாங்கம் இத்திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டத்துக்காக 15000 கோடி ரூபா செலவாகுமென்று அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது. இத்திட்டமூலம் ஏழுலட்சத்து ஐம்பதினாயிரம்பேர் வேலைவாய்ப்பைப் பெறுவர்' என்று தெரிவித்தார்.

"பிரதேச அபிவிருத்திச் சபைகள் மூலம் மக்கள் தொடர்பை ஏற்படுத்தி, தங்களுக்குத் தேவையான வற்றைப்பெற்று அரசுடன் ஒத்துழைத்து இந்த நல்ல முற்போக்கான திட்டத்துக்குப் பொதுமக்களாகிய சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டியது அத்தியாவசியமாகும்" என்றும் அவர் கூறினார்.

நாத்தாண்டியா, ஞாயிறு "எதிரிகள் எவ்வளவுதான் குற்றஞ்சாட்டினாலும் பொதுமக்களின் வாக்குப்பலத்தினால் ஆட்சிக்குவந்த இந்த மக்கள் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எவருக்கும் இடம்கொடுக்கப்போவதில்லை. பொதுமக்களுக்கு இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கவிருக்கும் உயர் அந்தஸ்தை இல்லாமல்செய்வதற்காக முயற்சி எடுக்கும் எந்த ஒரு நபருக்கும் எதிராக நாம் சரியான நடவடிக்கை எடுப்பதில் பின்வாங்கமாட்டோம்"

இவ்வாறு நீர்ப்பாசன, நெடுஞ்சாலைகள், மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூறினார். நாத்தாண்டியாவில் தலைபோல ஸ்ரீதம்மசித்தி பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் திரு. சேனநாயக்கா பேசினார்.

நாட்டை முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவருவதற்காக நாம் தக்க நடவடிக்கைகள் எடுத்துவருகையில் ஓராண்டுக்கு முன்னர் வழிதவறிச்சென்ற இளைஞர்களும், இளம்பெண்களும் இதற்குத் தடைபோடும் வகையில் முயற்சிகளில் இறங்கி மாபெரும் அழிவை ஏற்படுத்தினார்கள். இனிமேலாவது இந்த இளைஞர்களும் பெண்களும் நாட்டின் நலன் கருதி அரசின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து உழைத்தார்களானால் மிக விரைவில் நாட்டை நாம் முன்னேற்ற முடியும் என்று அமைச்சர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி இல்லாமை காரணமாக வெளிநாட்டுப் பொருள் இறக்குமதியைக் குறைக்க அல்லது முற்றாக நிறுத்திவிட அரசு முடிவுசெய்திருக்கின்றது. உணவுப் பொருட்களுக்காக வருடம்தோறும் 88 கோடி ரூபாய்வரை அரசு செலவு செய்கின்றது என்றார் அமைச்சர்.

## கடும் வரட்சியால் தோட்டங்கள் பாதிப்பு

கொழும்பு ஞாயிறு மலைநாட்டில் தொடர்ந்து இருந்துவரும் வரட்சியின் காரணமாக தேயிலை ரப்பர் தோட்டங்கள் பலவற்றில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் போதிய வேலை வசதியின்றியும் வருமானமின்றியும் கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறார்கள்.

தேயிலைச்செடிகள் காய்ந்து கருகிப்போயிருப்பதுடன், படுமோசமான வரட்சியின் காரணமாக ரப்பர் மரங்களில் பால் வெட்டுவது பல தோட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ளது.

தோட்டங்களில் வாரத்தில் ஆறு நாட்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற சட்டம் அமுலிலிருந்த போதிலும்கூட கடும் வரட்சி காரணமாகத் தோட்டங்களில் கொழுந்தெடுப்பது, கவ்வாத்து வெட்டுவதும் வெட்டுவது போன்ற எந்த வேலையும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மலைநாட்டில் ஓடைகளும் நீர் வீழ்ச்சிகளும் வற்றிக் கிடக்கின்றன.

கடந்தவாரம் ஆங்காங்கே சிறுமழை பெய்தபோதிலும் பொலனறுவா, அனுராதபுரம், புத்தளம் திருகோணமலை போன்ற இடங்களில் இந்த மழையினால் எதுவித பயனும் ஏற்படவில்லை என்று தெரிகின்றது. இதனால் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வரட்சியினால் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள விவசாயிகளுக்கு உதவிகள் செய்வதற்கு சமூகசேவைகள் இலாகா நடவடிக்கை எடுத்துவருகின்றது.

யாழ். மாவட்டத்தில்

## 7 மீன்பிடிச் சங்கங்கள்

குருநகர், திங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள மீன் பிடிச் சங்கங்களைக்கொண்ட ஏழு ஆரம்ப கூட்டுறவு மீன்பிடிச் சங்கங்களை கூட்டுறவு இலாகா பதிவு செய்துள்ளது. யாழ். மாவட்டத்தில் இனி இந்த ஏழு சங்கங்களுமே பதிவு பெற்ற சங்கங்களாக இயங்கும்.

## தரம்குறைந்த பொருட்களால் நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு, ஞாயிறு இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பாவனைப் பொருட்கள் பலவற்றின் தரம் மிகவும் குறைவாக இருப்பதால் இந்த நாட்டில் இன்னும் சில வருடங்களில் பலவித நோய்கள் மக்கள் மத்தியில் பரவுவதற்கு ஏதுவாகக்கூடும் என்று வைத்தியர்கள் அச்சம் தெரிவித்திருக்கிறார்களாம்.

இச்செய்தி "திவிரெஸ" பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

எந்த விதத் தரக்கட்டுப்பாடுமின்றி பல்வேறு பாவனைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் இதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சில பற்பசைகள், சவர்க்காரங்கள், முகப்பவுடர், உணவு வகைகள் போன்றவை மிகவும் கீழான தரத்தில் இருப்பதாகவும் இவைகளில் பலவும் உடலுக்கு ஊறுசெய்பவையாகவும் இருப்பதாக சோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

பல் துலக்குவதற்கென உற்பத்தி செய்யப்படும் அனேக பற்பசைகளும் பொடிகளும் தரம்குறைந்து காணப்படுவதால் பற்களுக்கும் ஈறுகளுக்கும் அவை ஊறுவிளைவிக்கலாம் என்றும் பெயரளவில் மாத்திரம் மருந்துகளாகத் தயாரிக்கப்படும் சில பொருட்கள் விற்பனைக்கு கொண்டுவரத்திருப்பதால் அவை மனித உடல்களுக்கு ஊறுவிளைவிக்கலாம் என்றும் கருதப்படுகின்றதாம். பாக்கெட்டுகளிலும் டின்களிலும் அடைக்கப்படும் பலபொருட்கள் மிகவும் தரம் குறைந்து காணப்படுவதாகவும் இவைகளைச் சாப்பிடுவதால் போஷாக்கு குறைவு ஏதுவாகும் என்றும் கருதப்படுகின்றதாம்

ஆசிய நாடுகளின்

## பொருளாதாரப் பிரச்னையை கவனிக்க ஆசிய நிலையம்

### நாடு திரும்பிய அமைச்சர் தகவல்

கொழும்பு, ஞாயிறு ஆசிய பிராந்திய நாடுகளின் பொருளாதார பிரச்னைகளைக் கவனிக்குமுகமாக ஆசிய நிலையம் ஒன்று நிறுவப்படவிருப்பதாக வர்த்தகதொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா தெரிவித்தார்.

பாங்கொக்கில் நடந்த ஆசிய தூரகிழக்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டுவிட்டு இன்று நாடு திரும்பிய திரு. சுபசிங்கா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஆசிய தூரகிழக்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே ஆசிய நிலையம் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் 400 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு நாடுகளின் அபிவிருத்தி பற்றியும் இந்த ஆசிய நிலையம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்றும் திரு. சுபசிங்கா கூறினார்.

ஆசிய பிரசாந்திய நாடுகளிடையேயுள்ள பிரச்னைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ராஜா
[யாழ்ப்பாணம்]
ரவிச்சந்திரன் - ரஜ்ஜ்ஸ்ரீ
சோ நடித்த
தினசரி 4 காட்சிகள்
டில்லி மாப்பிள்ளை

நியூ காஸில்ஸ்
[இணுவில்]
சிவாஜி-ஜெயலலிதா
[மூன்றுவேடம்] நடித்த
தினசரி 6-30, இரவு 10-00 சனி ஞாயிறு 2-30
தெய்வ மகன்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி
★ சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
திருவிளையாடல்
ஈஸ்மன் கலர்
புத்தம் புதிய கொப்பி

மனோகரா
[யாழ்ப்பாணம்]
சிவாஜி—சரோஜாதேவி
நடித்த
தினசரி மாலை 6-30, 9-30
அன்பளிப்பு
Daily 10-30 a. m, 4-45 p.m. Clint East wood in
FISTFUL OF DOLLARS

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-00, 6-00
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலேசமாளி
இத்துடன்
மறக்கமுடியாத இயக்கத்தின் முக்கிய காட்சிகள் 2-00 6-00 மணி காட்சிகளுக்கு மட்டும் 60 நிமிடங்கள் காண்பிக்கப்படும். பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேஷ ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
தினசரி காலை 10-30 இரவு 10-00
எங்கிருந்தோவந்தாள்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-30
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்மென் வர்ணச்சித்திரம்
ரிக்ஷாக்காரன்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு காலை 10-30
★ எம். ஜி. ஆர்.
★ சரோஜாதேவி
★ நாகேஷ்
★ அசோகன்
மற்றும் பலர் நடித்த
பெரிய இடத்துப் பெண்


## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear whe:l cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4168

### தேவை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின்சார வசதியுடன் கூடிய தனிப்பட்ட வீடு, பின்வளவு வசதியுடன் வாடகைக்கு தேவை. தொடர்புகொள்ளவும். ஓ. அண்ணாமலை, கே/பா, எஸ். சண்முகராசா 75, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 4119

### சோதிடம்

நட்சத்திரம், வயது, பூவின் பெயர். 60க்குள் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் கடிதமூலமும், நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆருடம். டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி. கொக்குவில். 4175

### திட்டம்

சுழிபுரம் ஞாயிறு

பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் பகுதியை, சமூக செவிலியமுன் மாதிரித் திட்டப்பகுதியாக அமைக்க சுகாதாரப் பகுதியினர் திட்டம் வகுத்துள்ளனர். பொது இயக்கங்களின் உதவியுடன் இத்திட்டம் அமுல் செய்யப்பட வுள்ளது.


யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, இரவு. 9-30
NEW YORK CALLS
SUPER DRAGON

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p.m.
Sat. Sundays 10-30 a. m
Great St. Louis
BANK ROBBERY

தினசரி 2-00 இரவு 9-45
ஜெய்சங்கர் — ராஜ்ஸ்ரீ
நடித்த
செல்வ மகள்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - பத்மினி
வியட்நாம் வீடு

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 4-30 மட்டும்
சனி ஞாயிறு 10-30
MARA OF THE
WILDERNESS

தினசரி 6-30, 9 45
சனி ஞாயிறு 2-30
விவசாயி

பவானி
மூளாய்
தினசரி 6-30
சனி ஞாயிறு 2-30
ரஞ்சன் - அஞ்சலிதேவி
பக்த பிரகலாதா

தினசரி இரவு 9-30
சனி ஞாயிறு காலை 10-30
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
மணக்காரப்பிள்ளை

சாந்தி
(சங்கானை)
தினசரி 6-30, 9 30
ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
தாலி பாக்கியம்


# "தொல்பொருள் ஆராய்ச்சியில் மக்களும் ஈடுபடவேண்டும்"

மாவிட்டபுரம், ஞாயிறு

'இந்நாட்டில் தொல் ஆராச்சியில் ஈடுபடுபவர்கள் சிலர் காசு வியாபாரத்தில் இறங்குவதால் ஆராய்ச்சி தடைப்படுகிறது. ஆராய்ச்சியில் கிடைக்கும் ஏராளமான வெளிநாட்டுக் காசுகளை யாதுகாத்துவைத்திருந்து வரலாறுகளை ஆராயாமல் அக்காசுகளை விற்பனை செய்வதால் பயன் ஏற்படாமல் போகிறது. இந்நிலை மாற வேண்டியதவசியமாகும்".

இவ்வாறு யாழ் தொல்பொருள் கழகத்தின் விசேட சொற்பொழிவு நிகழ்ச்சியில் உரையாற்றிய கழகத்தின் தலைவரும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியருமான திரு எஸ் பொன்னம்பலம் கூறினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் கலாநிதி டபிள்யூ எல் ஜெயசிங்கம் தலைமையில் நடந்த இச் சொற்பொழி நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறியதாவது:

"கந்தரோடைப்பகுதியில் பலகாலமாக நான் தொல்பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து பல விதமான பொருட்களைக் கண்டு பிடித்துள்ளேன். இங்கு ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்து ஆராய்ச்சியில் இறங்காமல் விடுவதற்கு காரணம் காசு வியாபாரம் தான். இங்கு ஆராய்ச்சியில் எடுக்கப்படும் பழங்கால வெளிநாட்டுக் காசுகளை வியாபாரம் செய்ய முயல்வதால் ஆராய்ச்சி தடைப்படுவதுடன் ஆராய்ச்சியில் பெற்ற பொருட்களை சகலரும் பார்க்கமுடியாத நிலையும் உருவாகிறது. இந் நிலை நீங்கவேண்டியதவசியம்.

ரஷ்யா, ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சிக்குழுக்கள் தொல்பொருள்பற்றி ஆராய்ந்து திராவிடர் நாகரீகம்தான் தொன்மையானது என்று தெரிவித்துள்ளன. மேலும் ஆராய்ச்சி செய்வதன் மூலம் ஏராளமான சான்றுகளைப் பெறமுடியும். ஆதலால் தொல்பொருள் ஆராய்ச்சியில் சகலரும் நாட்டம் கொண்டு நல்ல முறையில் ஆராய்ச்சி நடத்தவேண்டும்.

எம்நாட்டில் தொல்பொருளாராய்ச்சியில் கூடிய அக்கறை காட்டாதபோதும் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்து வருகிறதென்றே கூறவேண்டும். பொதுமக்களும் அறிஞர்களும் எம்பழைய செல்வங்களைக் கண்டுபிடிப்பதில் ஆர்வங்கொண்டு செயல்படவேண்டும்".

யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் கலாநிதி டபிள்யு. எல். ஜெயசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இவ்வுலகில் மனிதன் வாழ்வு சிறப்புற்று இருக்கும்போது, மனித இயல் ஆகியவற்றுடன் தொல்பொருள் ஆராய்ச்சியும் அவசியமானது. தொல்பொருள் ஆராய்ச்சிமூலம் எந்த

(5-ம் பக்கம் பார்க்க)


## திருமணமும் வரவேற்பு உபசாரமும்

மல்லாகம் புகையிரத நிலையவீதி, திரு. க. இளையதம்பி தம்பதிகளின் புத்திரன் திருநிறைசெல்வன் சுந்தரலிங்கம் (எக்ஸ் கதிர் பகுதி, மருத்துவமனை, கொழும்பு) அவர்களுக்கும், அளவெட்டி வடக்கு திரு. வ. கந்தையா தம்பதிகளின் புத்திரி திருநிறைசெல்வி நாகம்மா அவர்களுக்கும் 29-3-72 புதன்கிழமை காலை 11-00 மணிக்கு வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். அன்று பிற்பகல் மணமகன் இல்லத்தில் 5 மணிக்கு வரவேற்பு உபசாரம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வழைப்பைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும், தனிப்பட்ட அழைப்பு இல்லை.

அறிவிப்பவர்
சங்கீத பூஷணம்
V. K. நடராஜன்,
அளவெட்டி.

4061

## திருமண அழைப்பு

செ. சிவசுப்பிரமணியம் — சுசிலாதேவி
(Bobby)
'சிவமுருகன்ஸ்'
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.
செல்லத்துரை வீதி
உரும்பராய் தெற்கு.

இடம்: ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம் புன்னாலைக்கட்டுவன்;

காலம்: 29-3-72 புதன்கிழமை காலை 7-30 8-00 மணி வரை உள்ள சுபவேளையில் நிகழும் எமது திருமணவைபவத்திற்கு உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

4117

## திருமண அழைப்பு
சண்முகநாதன் — செல்வலஷ்மி

நிகழும் விரோதகிருது வருடம் பங்குனி மாதம் பதினாறும் நாள் (29-3-72) புதன்கிழமை காலை 7-45 முதல் 8-45 வரையுள்ள மேடலக்ன சுபமுகூர்த்தத்தில் யாழ்ப்பாணம், 253, நாவலர் வீதி, காலஞ்சென்ற டாக்டர் க. கனகசபாபதி திருமதி. கனகசபாபதி ஆகியோரின் புத்திரன், திருநிறைசெல்வன் சண்முகநாதன் (காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலை) அவர்களுக்கும், மாவிட்டபுரம் திரு. கே. செல்லையா தம்பதிகளின் புத்திரி திருநிறைசெல்வி செல்வலக்ஷ்மி அவர்களுக்கும் நல்லூர் சிவன்கோவிலில் திருமணவைபவம் நடைபெறும். அவ்வமயம் உற்றார் உறவினர் அனைவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை. 4062

# வங்கதேசத்தை அங்கீகரிக்கும் படி ராஜாங்க அமைச்சு சிபார்சு

## இனி முடிவெடுப்பது அதிபர் நிக்ஸனின் பொறுப்பு

வாஷிங்டன், மார்ச். 26

**புதிய வங்காளதேசத்தை தன் ஆதிக்கமுள்ள சுதந்திர நாடாக அங்கீகரிக்கும்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிபர் நிக்ஸனுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றது.**

வங்காள தேசத்தை அங்கீகரிப்பதா இல்லையா என்ற முடிவு எடுப்பது இனி அதிபர் நிக்ஸன் கையில்தான் இருக்கின்றது.

அமெரிக்க செனட்சபையும் ஏற்கனவே வங்காள தேசத்தை அங்கீகரிக்கும்படி அமெரிக்க அரசாங்கத்துக்கு ஏகமனதாக சிபாரிசு செய்திருக்கின்றது. என்றாலும் அதிபர் நிக்ஸன் இன்னமும் வங்காள தேசத்தை அங்கீகரிப்பதுபற்றி எதுவித அவசரமும் காட்டவில்லை என்று கூறப்படுகின்றது. அதே சமயம் வங்காள தேசத்தை அமெரிக்கா உரிய காலத்தில் அங்கீகரிக்கும் என அதிபர் நிக்ஸனும் ராஜாங்க அமைச்சர் திரு றோஜர்ஸும் சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்து வெளியிட்டிருந்தது சுட்டிக்காட்டப்படுகின்றது.

வங்காள தேசத்திலுள்ள அமெரிக்க உடர் ராஜியப் பிரதிநிதி அவசர ஆலோசனைகளுக்காக வாஷிங்டனுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்.

**வங்காளதேச குடியரசு தினம்**

புதிய வங்காள தேசம் இன்று தனது முதலாவது குடியரசுதினத்தைக் கொண்டாடுகின்றது.

கடந்த ஆண்டு இதேதினத்தில்தான் வங்காள மக்கள் ஆயுதம்தாங்கி யாஹ்யாகான் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்து எழுந்து போராடத் தொடங்கினர்கள்.

இன்று டாக்காவில் விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வங்காளதேச ராணுவத்தினர் நடத்தவிருக்கும் ராணுவ அணிவகுப்புகளை அதிபர் அபுசைத் சௌத்திரி பார்வையிட்டு மரியாதைகளை ஏற்றுக்கொள்வார். பிரதம மந்திரி ஷேக் முஜிபுர் ரஹ்மான் நாட்டு மக்களுக்கு விசேஷ உரையொன்றை வானொலிமூலம் ஒலிபரப்புவிருப்பதாகத் தெரிகின்றது.

வங்காள தேசக் குடியரசு தினத்தையொட்டி இந்திய அதிபர் திரு வி. வி. கிரியும் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியும் வாழ்த்துச் செய்திகளை அந்த நாட்டுத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இன்று காலையில் டாக்காவில் பீரங்கிக் குண்டுகள் 21 தரம் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து குடியரசுக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின.

## பிரி.- மோல்டா ஒப்பந்தம்?

லண்டன் மார்ச் 26

மோல்டாவில் பிரிட்டிஷ் துருப்புகள் தொடர்ந்து இருப்பது சம்பந்தமாக அந்த நாட்டுப் பிரதம மந்திரி திரு மின்டோஃபுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் மிடையில் விரைவில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவிஷயமாக இருநாடுகளுக்குமிடையிலிருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து இணக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

## 13 பேர் பலி

டெஹ்ரான் மார்ச் 26

ஈரானில் ஏற்பட்டுள்ள பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் 13 பேர் வரை பலியாகியிருப்பதாகத் தெரிகின்றது.

## நடந்து செல்கையில் மரணம்

கொழும்பு, ஞாயிறு

கனேடிய அதிகாரி ஒருவரின் மனைவி கொழும்பு தெருவொன்றில் நடந்துசெல்கையில் மரணமானார்.

மரக்கூட்டுத் தாபனத்தின் கனேடிய ஆலோசகரான ஜேசப் கோர்டன் சண்டர்ஸன் என்பவரது மனைவியே இவ்வாறு மரணமானவர். சுறவாக்காட்டிலுள்ள விஜேராம மாவத்தை வழியாக தமது கணவருடன் நடந்து செல்கையில் திருமதி டொரத்தி சண்டர்ஸன் திடீரென மயங்கிவிழுந்து மரணமானார். மயக்கமடைவதற்கு முன்பு மார்பில் பலமாக வலி ஏற்படுவதாக அவர் கூறினாராம். தனியார் மருத்துவசாலைக்கு கொண்டு போகப்பட்ட அவர் முன்னதாகவே உயிர்நீத்திருந்தது தெரியவந்ததாம்.

## உற்சவ மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டு உற்சவ மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை இரவு ஆலய முன்றலில் நடைபெறவிருக்கிறது. கராச்சிப் பிரிவு காரியாதிகாரி திரு இ. யோகநாதன் வைபவத்திற்குத் தலைமை தாங்குவார். கிளிநொச்சிப் போதனாசிரியர் திரு எஸ் வி தாமோதரம் முதற்பிரதியைப் பெறுவர். தொகுதி எம். பி திரு வீ ஆனந்தசங்கரி பலநோக்கு சங்க பாதிகாரி திரு சோ அருணாசலம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

## இந்தியாவுக்கு வருவதில் பூட்டோ தயக்கம்

பாகிஸ்தான போர்க்கைதிகள் பற்றியும் இதர பிரச்னைகள் பற்றியும் இந்தியத் தலைவர்களுடன் நேரடியாகப் பேசுவதற்காக பாகிஸ்தான் அதிபர் பூட்டோ இப்போதைக்கு புதுடில்லிக்கு வருவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

போர்க் கைதிகள் சம்பந்தமாக இந்திய அரசு கடைப்பிடிக்கும் கொள்கையை அவர் சிறிதும் விரும்பவில்லை. இந்தப் பிரச்னையின் காரணமாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்ந்தும் மோசமாகவே இருக்கும் என்ற முறையில் அதிபர் பூட்டோ கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

ராவல்பிண்டியில் வைத்து பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் அதிபர் பூட்டோ இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் போர்க் கைதிகளை இந்தியர்கள் கொடுமை புரிவதாகக் குற்றஞ் சாட்டினார்.

போர்க்கைதிகள் சம்பந்தமான பேச்சுக்களில் வங்காள தேசமும் கலந்து கொள்ள வேண்டும் என்ற இந்திய நிலையை அவர் கண்டித்தார். பாகிஸ்தான் போர்வீரர்கள் ஏககாலத்தில் இந்தியபடைகளிடமும் முக்திவாஹினியிடமும் சரணடைந்தார்கள் என்ற இந்தியக் கூற்றையும் அவர் மறுத்தார். பாகிஸ்தான் போர்க்கைதிகளை வங்காள தேசம் விசாரிக்க முற்படக்கூடாதென்றார்.

அப்படிச்செய்தால் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கு மிடையிலான உறவுகள் சீரடையாமலே போகலாம் என்றார்.

போர்க்கைதிகளை விசாரிக்கும் உரிமை பாகிஸ்தானுக்குத்தான் உண்டென்றார்.

வங்காளதேசத்திலுள்ள பீஹாரிகள் அல்லாதவர்கள் அந்நாட்டைவிட்டு தயாராக கொண்டவர்கள் என்றார்.

உள்நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றிக் குறிப்பிடுகையில், மக்கள் தம்மை விரும்பாவிடில் ராஜினாமாச் செய்யப்போவதாகச் சொன்னார். ஆர்ப்பாட்டங்கள் என்றும் பிடிக்காது இனிமேலும் அனுமதிக்க முடியாது என்றார்.

## பெற்றோரது ஒத்துழைப்பு தேவை

பருத்தித்துறை, ஞாயிறு

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதுடன் பெற்றோரின் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. பாடசாலையில் பிள்ளையின் கல்வி வளர்ச்சியையும் பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும். பிள்ளையின் எதிர்காலம் பாடசாலையால் மட்டுமன்றி பெற்றோரினாலும் உருவாக்கப்படுகிறது என்ற அடிப்படை உண்மையைப் பெற்றோர் நன்கு உணரவேண்டும். பாடசாலையும் வீடும் ஒத்துழைத்தால்மட்டுமே மாணவரின் உள, உடல் வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும்".

இவ்வாறு வலட்டி றோமன் கத்தோலிக்கமகா வித்தியாலய அதிபர் திரு சி வின்சன்ற், மேற்படி மகா வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்துக்குத் தலைமைதாங்கி உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார். புதிய கல்வித் திட்டம் பற்றியும் அவர் விளக்கிக்கூறினார்.

## வரட்சியால் நோய்

பருத்தித்துறை, ஞாயிறு

வரட்சி காரணமாக வடமராட்சிப் பகுதியில் ஆங்காங்கு நெருப்புக் காய்ச்சல் பொக்குளிப்பான் போன்ற நோய்கள் பரவிவருகின்றன. இதனால் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நோயாளரின் தொகை கூடிவருவதாகத் தெரிகிறது.

0 0 0

மன்னார், ஞாயிறு

மன்னாரில் கடும் வரட்சியின் காரணமாக அகோர வெப்பமாக இருக்கிறது. குளம், குன்று, நீர் நிலைகளெல்லாம் வற்றிவிட்டன. கிராமப்பகுதிகளில் வயல்களெல்லாம் கருகிய நிலையில் காட்சியளிக்கின்றன. இந்த அகோர வெப்பத்தின் காரணமாக கண்நோவு, பொக்குளிப்பான் - கூவைக்கட்டு முதலிய வியாதிகளும் பரவியுள்ளன.

## அம்மன் குளிர்த்தி

யாழ்ப்பாணம் திங்கள்

நாவற்குளி புவனேஸ்வரி அம்மன் கோவிலில் இன்று பங்குனித் திங்கள் 2-வது வாரத்தை முன்னிட்டு விசேஷ அபிஷேகங்களும் குளிர்த்தியும் நடைபெறவிருக்கின்றன.

'சுந்தரம்' தாக்கல் செய்த

## எஸ்.பி. மீதான வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம் ஞாயிறு

யாழ். பொலிஸ் சுப்பிரின்டென்டன்ட் உட்பட 18 பொலிஸ் அதிகாரிகள்மீது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவகால நிர்வாகியான திரு வி சுந்தரலிங்கத்தினால் தொடரப்பட்டிருந்த வழக்கு மேமாதம் 12-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஆலயக் கதவைப் பூட்டித் தம்மைக் கடமைசெய்யவிடாது தடுத்தனர் என்றும் தம்மைப் பயமுறுத்தினர் என்றும், அத்துமீறிக் கோவிலுக்குள் பிரவேசித்தனர் என்றும் இவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சென்ற தவணையின்போது முடிக்குரிய வழக்கறிஞர் அமரசேகரா இவ்வழக்கில் தாம் வழக்காளி பக்கம் ஆஜராவதாகத் தெரிவித்ததையடுத்து இவ்விசாரிக்கும் வழக்காளியான திரு வி சுந்தரலிங்கத்துக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது. இதுசம்பந்தமான தீர்ப்பை அடுத்த தவணையில் அறிவிப்பதாக நீதிபதி தெரிவித்திருந்தார். நேற்று முன்தினம் வழக்கு மீண்டும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு ஜி. சிவானந்தன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் தீர்ப்பை அறிய அரசாங்க வழக்கறிஞர் வருகை தரவிருந்தார். அவசர வேலை காரணமாக சில எதிரிகள் சமுகமளிக்க முடியவில்லை என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நீதிபதி வழக்கை மே மாதம் 12-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் புறக்டர் க. நடராசாவும் வழக்காளி தாமே தனது சார்பிலும் ஆஜரானார்.

## மலேரியா தடை இயக்க வேலை இழந்தோர் மகஜர்

சுன்னாகம், ஞாயிறு

மலேரியாத்தடை இயக்கம் பகுதியில் யாழ்ப்பாணப் பிரிவில் சமீபகாலம் வரை நாங்கள் வேலைசெய்து கொண்டிருந்தோம். எங்களுடைய நேர்மையினதும் அயராதுமான உழைப்பினால் இப்பகுதியில் மலேரியா கட்டுப் படுத்தப்பட்டது. ஆனால் நாங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டோம்.

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றை யாழ்ப்பாணப் பகுதி மலேரியாத்தடை இயக்க வேலை இழந்தோர் சங்கம் சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு பி. ஜி. ஆரியதாசவிற்கு அனுப்பியுள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

எங்களுடைய கடுமையான உழைப்பிற்கு உரிய இடத்தைதர எங்களிலாகா தவறிவிட்டது. தற்சமயம் யாழ்ப்பாணம் பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு வேலையாட்கள் எடுக்கப்பட இருப்பதாகவும் அத்தகைய வேலையாட்கள் தொழிற்கந்தோர் மூலம் எடுக்கப்பட இருப்பதாகவும் தெரிகிறது. இந்த இடத்தில் எங்கள் கடந்தகால சேவைகளைக் கணக்கிலெடுப்பதில் நாங்கள் மலேரியாத்தடை இயக்கத்தில் வேலைசெய்தோம் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக தொழிற்கந்தோரில் எங்கள் பதிவு ரத்துச் செய்யப்பட்டது. வேலை இழந்தபின்பு மீண்டும் நாங்கள் பதிவு செய்த காரணத்தினால் பதிவு முறையில் பின் தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே நேர்முகப் பரீட்சைக்கு நாங்கள் அழைக்கப்படும் சந்தர்ப்பம் எங்களுக்கு இல்லை. இதில் தலையிட்டு எங்களுக்கு நீதிகிடைக்கவும் எங்கள் இளமைக்காலங்களை வீணடிக்காது போதிய முதலிடம் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## மயரோகத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பண்ணை மார்புச் சிகிச்சை நிலையத்தில் கயரோகத்தைத் தடுப்பதற்கான பி. ஸி. ஜி. மருந்து இம்மாதம் 29-ம் திகதி ஊசி மூலம் ஏற்றப்படவிருக்கிறது.

## சந்தையடியில் சைக்கிள் திருட்டு

சுன்னாகம், ஞாயிறு

உடுவில் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருகின்றது. மருதனார்மடம் சந்தையில் சாமான் வாங்குவதற்காக வருபவர்கள் சந்தைக்கு வெளியே விட்டுச் செல்லும் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. இதனால் பலர் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

குடியிருப்புக் காணிகளாக

# "விவசாயக்காணிகள் மாற்றப்படுவதை உடன் கட்டுப்படுத்துக!"

## விவசாயிகள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் உள்ள விவசாய நிலங்கள் குடியிருப்பு நிலங்களாகவும், வேறு விதமாகவும் மாற்றப்படுவதை உடனே கட்டுப்படுத்தவேண்டும் என்று இலங்கை தேசிய விவசாயிகள் முன்னணியின் வடபிரதேசக் கிளை அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் முன்னணி சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் ஒன்றில் மேற்படி விஷயமாகப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

வட பிரதேசத்தில் விவசாயத்திற்குத் தகுதியான விவசாயத்திற்கு உபயோகப்பட்டுக் கொண்டிருக்கும் நிலங்கள் அண்மைக் காலத்தில் அதிகமாகக் குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இந்நிலைமை தொடர்ந்து நீடித்தால் வடபிரதேசத்தில் விவசாய நிலங்கள் இல்லாதுபோகும். இதன் பயனாக வடபிரதேச விவசாயிகள் விவசாயம் செய்ய ஏற்ற போதிய நிலமில்லாதவர்களாகி விடுவார்கள். எமது நாட்டின் உப உணவுப் பயிர்ச் செய்கையும் பாதிக்கப்படும். ஆகவே விவசாய நிலங்களைக் குடியிருப்பு மற்றும் தேவைகளுக்கு மாற்றுவதை உடன் கட்டுப்படுத்த வேண்டும். இன்றுள்ள விவசாயக் காணிகள் கணிக்கப்பட்டு அவை விவசாய நிலங்கள் என்றும் விவசாயப் பிரதேசங்கள் என்றும் பிரகடனப்படுத்தப்படவேண்டும். இக்காணிகளின் பொறுப்புக்கள் விவசாயக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

### காணி உச்சவரம்பு

காணி உச்சவரம்புச் சட்டத்தை வரவேற்றுப் பின்வரும் கருத்தை இ. தே. வி. முன்னணி வடபிரதேசக் கிளை அரசாங்க அதிபருக்குத் தெரிவித்துள்ளது.

காணி உச்சவரம்புச் சட்டம் கொண்டுவருவதை எமது சங்கம் மனப்பூர்வமாக வரவேற்கிறது. அதே சமயம் காணியின் உச்சவரம்பு எக்காரணம்கொண்டும் நாட்டின் எப்பகுதியிலும் இருபத்தைந்து ஏக்கருக்கு மேற்படாமல் சட்டமியற்றப்படல் வேண்டும். அதேசமயம் பிரதேச வாரியாக - மக்கள் - தேவை - குடிச்செறிவு காணியின் நிலையம், சனிவளம், பாசன வசதி இவைபோன்ற விடயங்களைப் பொறுத்து உச்சவரம்பு 25 ஏக்கருக்கு குறைவாகவும் வரையறைசெய்யப்படலாம். வடபிரதேசத்தைப் பொறுத்தமட்டில் இது மிகப் பொருத்தமானது. இவ்விடயம் பிரதேசவாரியாக எடுத்து ஆராயப்படவேண்டும்.

வடபிரதேசம் உபஉணவுச் செய்கைக்கு ஏற்றது. இங்குள்ள விவசாயிகள் உபஉணவு பயிர்ச்செய்கையை நம்பி வாழ்பவர். வடபிரதேச நிலஉடைமையாளர் விவசாயிகளைக் கண்டபடி விவசாய நிலங்களிலிருந்து வெளியேற்றுதல்- விவசாய நிலங்களை தரிசு போடல் - குடியிருப்பு நிலமாக மாற்றுதல் போன்ற பல வழிகளிலும் விவசாயத்திற்கும் விவசாயிக்கும் ஊறு விளைவிக்கின்றனர். இவர்களிடமிருந்து விவசாயிகளையும் விவசாயத்தையும் பேண உள்ள வழி நெற்காணிச் சட்டம் விவசாய நிலங்களுக்கும் பொருந்தக் கூடியதாக விரிவுபடுத்தப்படவேண்டும் என்றும் முன்னணி தெரிவித்துள்ளது. விவசாயக் கடன்கள் பற்றி முன்னணி தெரிவிப்பதாவது:

விவசாயக் கடன் பெறுவதற்கு இன்றுள்ள கட்டுப்பாடுகளை இலகுவாக்குவதுடன் கடன்மானிய உதவியின் அளவையும் அதிகரிக்கப்படவேண்டும். இன்னும் அரசினால் வழங்கப்படும் பல உதவிகள் சலுகைகள் தெரிந்தோ தெரியாமலோ பல போலி விவசாயிகளின் கைக்குப் போய்விடுகின்றது. இதனால் உண்மையான விவசாயியும் விவசாய உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. இன்னும் அரசின் திட்டத்தின் திட்ட பொருள் உற்பத்தியும் பாதிக்கப்பட நாட்டில் பொருள் தட்டுப்பாடு உண்டாகின்றது. விலை ஏறுகின்றது. கள்ளவியாபாரம் பெருகுகின்றது. இதைத் தவிர்க்கவேண்டுமாயின் உண்மையான விவசாயி யார். உதவி தேவையுள்ள விவசாயி யார் என்பதைச் சரியாக இனங்கண்டு ஏற்ற காலத்தில் ஏற்ற உதவியை வழங்கவேண்டும்.

கடமையுணர்வுள்ள

## திறமைக்கு ஈடில்லை

பருத்தித்துறை, ஞாயிறு

"திறமை எவ்விருக்கிறதோ அத்திறமைக்குத் தகுந்த பிரதியுபகாரமும் காத்திருக்கும். ஆனால் அத்திறமையை சமுதாய வளர்ச்சிக்கு அர்ப்பணிக்கக்கூடிய கடமை உணர்ச்சியும், பரந்தநோக்குமிருந்தால் அத்திறமைக்கு ஈடான செல்வம் எங்கும் இருக்கமுடியாது"

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து உயர் பதவிக்குச் செல்லும் திரு. சி இரத்தினவேலுக்கு மேற்படி கல்லூரி ஆசிரியர் அளித்த இரவு விருந்தின்போது தலைமை தாங்கி உரையாற்றிய அதிபர் திரு. சி. இராசதுரை கூறினார்.

இவரது பண்புகளைப் பாராட்டிப் பலரும் பேசிய பின் திரு. இரத்தினவேல் நன்றி கூறினார்.

# 'கிராமத் தேவைக்கேற்ப தவறணைகள் ஏற்படும்'

யாழ்ப்பாணம், திங்கள்

'தேவைக்கேற்ற முறையில் தவறணைகள் நிறுவப்படும். ஒரு கிராமத்தில் ஒன்றாகவும், சில கிராமங்களில் இரண்டு மூன்றாகவும் தவறணைகள் இடம் பெறவிருக்கின்றன. இடவிஸ்தீரணத்தையும் தொழிலாளர்களது உறுப்புரிமையையும் பாவனையாளர்களின் வசதிகளையும் முன்னிட்டே தவறணைகள் நிறுவப்படுகின்றன. இவ்வாறு யாழ் செயலக உதவியாளர் திரு கே சண்முகலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் இது பற்றிக் கூறியதாவது: இம் மாதம் 31ம் திகதிவரை சங்க உறுப்பினர்கள் சேர்வதற்கு கால தவணை நீடிக்கப்பட்டுள்ளதால் மேலும் உறுப்பினர்கள் தொகை அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது.

சங்கத்தில் உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்ப திகதி முடிவடைந்தபோதிலும் சில கிராமப் புறங்களிலிருந்து முடிவு திகதிக்குப் பின்னரும் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன இவையத்தனையும் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்தார். (குநி)

## அதிபர் ஓய்வு

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய அதிபர் திரு. கணபதிப்பிள்ளை சிவசிதம்பரம் இம்மாத இறுதியில் தமது 35 ஆண்டுச் சேவையின் பின் ஓய்வு பெறுகிறார். விசேட விஞ்ஞான இலண்டன் பட்டதாரியான இவர் மினுவாங்கொட மத்திய கல்லூரி, மட்டக்களப்பு மத்திய கல்லூரி, வேலணை மத்திய மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளிலும் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

## சொற்பொழிவு நிகழ்த்துவார்

மாவிட்டபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளரான பிரிட்டனைச் சேர்ந்த திரு. [illegible] இம்மாதம் 29-ம் திகதி 'நவீன ஓவியங்கள்' பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஒன்றை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நிகழ்த்தவிருக்கிறார்.

வயோதிபர் 'கொலை திரொலி

# சந்தேகநபர் கோர்ட்டில் சரண்

மாவிட்டபுரம், சனி

ஏழாலை வடக்கு வயோதிபர் கொலை சம்பந்தமாக நீதிமன்றத்தில் சரண்புகுந்த இளைஞர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏழாலை வடக்கில் உள்ள கைத்திலிங்கம் தம்பு என்ற வயோதிபர் ஒரு காணியில் நின்று இலைச்சருகு பொறுக்கிக் கொண்டிருக்கும்போது குத்துக்காயத்துக்கு இலக்காகி மரணமானது குறித்து கொலையாளராக இளைஞர் தேடப்பட்டு வந்தார்.

பிரஸ்தாப இளைஞர் வழக்கறிஞர் ஆர். ஜே செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிபதி ஐ. விநாயகன் முன் சரண் புகுந்ததையடுத்து மல்லாகம் பொலிசாரால் அவர் மீது கொலைக்குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 4ந் திகதிக்கு ஒத்திவைத்து இளைஞனை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## புகார்

சுழிபுரம் ஞாயிறு

பொன்னாலைப் பகுதியில் கடந்த சில தினங்களாக களவுகள் நடைபெற்றுள்ளதாக சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. ஒரேநாளில் மூன்று இடங்களில் களவு நடைபெற்றுள்ளது. இக்களவு வெளியாட்களின் தொடர்புடன் நடைபெறுவதாகப் பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர்பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்
டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறுர்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P.0447 ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

